Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

God is faithful for the past seventy years.

Vol. 70 | அநேகம் காளைகள் என்னைச்.... பாசான் தேசத்துப்... வளைந்து கொண்டது. சங்.22:12 | பிப்ரவரி 2024 | No.2

நம்முடைய அன்புக்கான மகிமையான காரணம்

The glorious reason for our love

Charles H. Spurgeon (1834 - 1892)

"அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" *(1யோவா.4:19)*

ஊழியருடைய பிரசங்கத்தைக் கேட்டோ, அவரது தத்துவங்களாலோ அல்லது ஆண்டவரின் போதனைகளில் இவைகளெல்லாம் இருக்கிறது என்பதாலோ ஆண்டவரை நாம் நேசிக்க வில்லை. அன்பு அவரிலிருந்து ஊறிப் பாய்ந்து அவர் பின்னாலே செல்லுகிறது. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். அன்புக்குக் காரணம் அன்பேதான். அவர் அன்பு கூருகிறார், நாமும் அன்பு கூருகிறோம். அவரது அன்பு முதலாவதானது. நமது அன்பு இரண்டாவது. இது சத்தியம். நாம் அன்பு கூருவதற்கு முன்பே அவர் அன்பு கூர்ந்தார்.

மனம் மாறுவதற்கு முன்னால்

மனந்திரும்புவதற்கு முன்பு உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பாருங்கள். அப்போதே அவர் உங்களை நேசித்தார். அவரை நீங்கள் நேசிக்கக் காரணம் என்ன? அவர் உங்களை நேசிப்பதாக அறிவிக்கப்பட்ட போது நீங்கள் அதை விசுவாசித்தீர்கள்.சட்டங்களும் பயங்கர வாதங்களும் உங்களை நேசிக்க வைக்க வில்லை. அவைகள் தடைகளாகவே இருந்தன. இரத்தம் சிந்தி சம்பாதித்த மன்னிப்பு உங்களை உருகச் செய்து, அவரை நேசிக்காமலிருக்கச் செய்ய முடியவில்லை.

இது ஒரு பெரிய சத்தியம். தயவு செய்து இதனை மறுபடியும் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் கவனமற்றவர்களாக வும், அவரது வார்த்தையை உதாசீனம் பண்ணினவர்களாகவும், ஜெபம் செய்ய முழங்கால் முடங்காமலிருந்த போதும் இயேசு உங்களை நேசித்தார். நம்மில் ஒரு சிறு நன்மை கூட இல்லாத போது அவரது பெரிய அன்பு நமக்கு காண்பிக் கப்பட்டது. அக்கிரமங்களிலும் பாவங் களிலும் மரித்திருந்த நம்மை அவர் நேசித்தார். அவர் நாமம் மகிமைப் படுவதாக!

சிலுவையின் மேல்

நமது உறுதியான நம்பிக்கையும் மகிழ்வான உறுதியும் என்னவென்றால் சிலுவைக்கு முன்னதாகவே அவர் நம்மை நேசித்தார் அந்நாளில் இரு நித்தியங்களுக்கு மத்தியில், பழைய உடன்படிக்கையின் முடிவில், புது உடன்படிக்கையின் ஆரம்பத்தில் அவர் மரித்தார். சூரியன் இருளடைந்து நீதியின் சூரியன் பிரகாசிக்கத் தொடங் கினார். பூமி அதிர்ந்து பரலோகம் ஸ்தாபிக்கப்பட்டது. மரித்தவர்கள் உயிரோடெழுந்தார்கள், மனிதருடைய எண்ணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தேவ ஆட்டுக்குட்டி எல்லா மக்க ளுடைய பாவங்களையும் சுமந்து கொண்டு சிலுவையில் மாண்டார்.

அந்த நாளில் அவரது உன்னத அன்பை நிரூபித்து விட்டார். அழுகை யால் கண்கள் சிவந்து விட்டன. கன்னங்கள் உமிழ்நீரால் அழுக்கடைந் துள்ளன. கன்னங்களில் மேலும் கயவர்களின் கைபட்டு உராய்ந்திருக் கின்றன. இந்தக் காட்சியெல்லாம் அவர் நம்மை எவ்வளவாக நேசித்தார் என்பதற்கான அடையாளங்கள்லவா!

அவரது அன்பான தலையில் முள்கிரீடத்தால் ஏற்பட்ட காயங்கள், இணையற்ற அமைதலான அவரது வாய், தாகத்தால் வறண்ட நாவு, துக்கம் நிறைந்த முகத்தையும் ஏறிட்டுப் பார்ப்போம். வதைக்கப்பட்ட அவரது முழு சரீரத்தையும், கூடவே கிருபை யின் இளம் கரங்கள், எல்லாவற்றின் மீது இரத்தம் தொய்ந்திருக்கிறதே. கால்கள் ஆணிகளால் கடாவப்பட்டு இரத்தம் சொட்டுகிறது. எத்தனை ஆழமான அன்பு! அவருடைய விலாவைப் பார்ப்போம், ஈட்டியால் சேவகன் குத்தியதால் அவரது விலையேறப் பெற்ற இரத்தம் தண்ணீரோடு புறப்பட்டு வந்ததே. அவரது அன்பின் விசை எத்தகையது! நாம் உருவாகு முன்னே, இவ்வுலகில் பிறப்பதற்கு முன்னே அவர் நம்மை முதலாவது நேசித்தாரே.

சிருஷ்டிப்புக்கு முன்னாலேயே

ஆனால் வேதபுத்தகம் இதற்கும் முன்னால் போகச் சொல்லுகிறது. ஏதேன் தோட்டத்தில் நம் ஆதி பெற்றோர் பாவம் செய்து நம்மை சாபத்துக்குள்ளாக்கிய போது, சர்ப்பத் தின் தலையை நசுக்குவதாக ஒரு வாக்கு அளிக்கப்பட்டது. மலைகள் தோன்றும் முன்னமே, பூமி ஒழுங்கற்று இருந்த போதே, சூரியன் தன் ஒளியைப் பரப்பு முன்னே, நட்சத்திரங்கள் தங்கள் வட்டத்தில் சுழல ஆரம்பிக்குமுன்னே, இரவும் பகலும் ஏற்படுமுன்னே, அப்போதிலிருந்தே இயேசு தமது ஜனத்தை நேசித்தார். அவரது கண்கள் மனிதனைக் கண்டது. அவனைப் பிரித்து எடுத்து நித்திய காலம் அவரோடு வைத்துக் கொள்ள சித்தம் கொண்டார். அவர்தான் நம்மை முதலாவது நேசித்தார்.

இவையெல்லாம் நாம் அவரை நேசிக்கக் காரணமாக அமையாவிட் டால் எங்கு காரணத்தைத் தேடுவது? அவர் முன்பு நம்மை நேசித்தாரே! குளிர்ந்த இருதயங்களே! கடினமான கல் துண்டுகளே! பனிக்கட்டிகளே! இந்த அன்பினைப் பார்த்து மனம் உருகா விட்டால் எப்போது மனம் உருகும்? அவரல்லவா முந்தி நம்மில் அன்பு கூர்ந்தார்? இந்த மகத்தான எண்ணம் அக்கினியைப் போல நமது உள்ளங்களின் ஆழங்களில் விரைந்து சென்று சுத்திகரித்து நம்மையும் எரியச் செய்யட்டும். அவர் நம்மில் முந்தி அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரை நேசிப்பது கட்டாயம்.

ஆச்சரியமான அன்பு

வார்த்தைகளால் தேவ அன்பை நான் விவரிக்க இயலாது. அவரது அளவற்ற அன்பால் பரத்தை விட்டு இறங்கி வந்து ராஜமகிமையைத் துறந்து, பூமியின் பலவீனங்களை எடுத்துக் கொண்டார். இந்த அன்பு மிகப் பெரிய தானபடியால் காலங்கள் கடந்தும் ஒரு அணு அளவு கூட மங்கவோ குறைய வோ இல்லை. அந்த அன்பு தன் சகிப்புத் தன்மையால் பலமுறை நாம் அவிசு வாசத்தாலும் பாவத்தாலும் கோப மூட்டியும் ஒரு போதும் தணிந்து போக வில்லை. திரளான தண்ணீர்கள் அதைத் தணிக்க முடியவில்லை, பெரு வெள்ளம் அதனை மூழ்கடிக்க முடியவில்லை.

(3-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 பிப்ரவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும் துதிக்கிறேன். டிசம்பர் மாதம் 4,5 தியதிகளில் சென்னை பட்டணத்தில் புயல், மழை ஏற்பட்ட நாட்களில் எழுத ஆரம்பித்தேன்.

முதலாவது ஒரு வேத பகுதியை அச்சிடுகிறேன்:

அவர் சமீபமாய் வந்த போது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் **கண்ணீர் விட்டழுது,**

உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

உன்னை சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதிற் போட்டு, உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

உன்னையும், உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார் லூக்.19:41-44.

பாடல்

ஆடம்பரங்கள் மேட்டிமைகள்
ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரகவழி போகின்றாரே
ஆ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க
ஆண்டவரே இரங்கும்

இரண்டாவதாக ஊடகங்களில் நான் கண்ட காட்சிகளில் சிலவற்றை எழுதுகிறேன்:

1. சென்னை பட்டணம் தண்ணீரில் மிதந்ததைக் கண்டேன், அது ஜலப்பிரளயம் போல காட்சியளித்தது.

2. கார்கள் தண்ணீரில் மிதந்தது, வீடுகள் தரைத்தளம் முழுவதும் மூழ்கியதால் வீட்டில் இருந்த எல்லா பொருட்களும் வீணாய் போனதோடு, துணிகள், பிள்ளைகளுடைய படிப்பு சான்றிதழ்கள் போன்றவையும் அழிந்து போனது.

3. ஏராளமான மக்கள் 3 நாட்கள் பசியோடு, மின்சாரம், குடிநீர், பால் போன்ற மிகவும் அத்தியாவசியமான பொருட்களும் கிடைக்காமல் அவதிபட்டனர்.

பாடல்:

உலக வாழ்க்கை குறுகியதே
சீக்கிரம் கடந்திடும்
உலக மீட்பர் இயேசுவின்
வருகை சமீபமே
தேசம் அழியுது பார்
இயேசு வரப்போகிறார்

கன்னியாகுமரி முதல் ஜம்மு காஷ்மீர் வரை பாரத தேசம் இயேசுவை அறியட்டுமே.

மூன்றாவதாக உபவாச ஜெபங்களுக்காக நாம் அச்சிடும் அழைப்பிதழ் 2-ம் பக்கம் உள்ள செய்தி:

நாம் தொலைக்காட்சியில் காணும் நிகழ்வுகள், செய்தி தாளில் வாசிக்கும் சம்பவங்கள் போன்றவை ஆத்துமாவை உறைய வைத்து சோர்ந்து போகச் செய்கின்றன. நம்மைச் சுற்றி நடக்கின்றவை குறித்து நான் அதிர்ச்சி அடைய வில்லை; மாறாக இந்த சூழலுக்கு நாம் எப்படி பதிலடி கொடுக்க வேண்டுமென்றுதான் தேவ மக்களைக் கேட்க விரும்புகிறேன்.

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர் களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப்போகும் அழிவை பார்த்த போது, அவர் நகரத்திற்காய் அழுதார். நம்மில் சிலர் ஜெபிப்பதின் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நம் நாட்டின் மீது வரும் தேவனின் தண்டனை தள்ளி வைக்கப்படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய்தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக்குண்டா?

பாடல்:

நரக வழி செல்லும் மாந்தர்க்காய்
நடு இராப்பகல் அழுதே
நம் தலை கண்ணீராய் கண்கள் கண்ணீராய்
நனைந்து வருந்தி ஜெபிப்போம்

நான்காவதாக சென்னையில் சமீபத்தில் நடந்த உபவாச ஜெபங்களைப் பற்றி எழுதுகிறேன்:

17-09-2022 சனிக்கிழமை - Jesus care's Assembly, Anna Nagar
08-10-2022 சனிக்கிழமை - Zion Prayer House, Villivakkam
12-11-2022 சனிக்கிழமை - Christian Assembly Church, Ayanavaram

செய்தி: "நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்." எசேக்.22:30.

ஜெபம்: "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது." லூக்.22:44.

"அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு," எபி.5:7.

பாடல்

புகழும் வேண்டாமே
பெயரும் வேண்டாமே
ஆத்துமாக்களை தாருமே
இந்தியாவை தாருமே

கோடி கோடி மக்களுண்டு
இந்த தேசம் இயேசுவை காணட்டும்

இந்தாவதாக உடன் ஊழியர்களைப் பற்றி எழுதுகிறேன்:

ஊழியம் செய்யும் அனைவரும் எங்கள் உடன் ஊழியர்களே!

(7-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாராள அன்பினால் இயேசு நமக்கு எல்லாவற்றையும் தந்தார். அவர் நேற்றும் இன்றும் என்றும் தந்து கொண்டிருக்கிறார். அவரோடுள்ள உறவையும் தந்து தமது இரத்தத்தால் நம்மைக் கழுகி, நீதி என்னும் அவரது ஆடையால் நம்மை தரிப்பித்து, தமது ஜீவனையே நமக்காக அளித்து, இறுதியில் நாம் இளைப்பாற அவரது சிங்காசனத்தையே நமக்கு அளிக்கிறார்.

இந்தத் தாராள அன்பே! உமக்காக எதையுமே நீர் வைத்திருக்கவில்லை. முற்றிலும் சுயநலமில்லாத உமது அன்பு தான் எவ்வளவாக தியாகம் செய்ய முடியுமோ அவ்வளவாக தியாகம் செய்த அன்பு. அவருடைய பாடுகள், துக்கங்கள் பயங்கரமானவை! இவை யெல்லாம் அவருடைய எதிரிகளுக்கு அவர் காண்பித்த இனிய அன்பு.

சேராபீன்களுடைய நாவு ஒரு வினாடி எனக்கிருந்தால் போதும்! அக்கினி நாவு எனக்குக் கொடுக்கப் பட்டால் எனது எஜமானை நான் புகழுவேன்! அல்லாவிட்டால் அவரது அன்பு அளவில்லாதது எனச் சொல்லி திருப்தியாயிருப்பேன். அதற்குள் மூழ்கி யிருப்பேன். அந்த அன்பு என்னை ஸ்நானப்படுத்த ஜெபிப்பேன். இது முதல் நான் சாகவும் கிறிஸ்து பிழைத் திருக்கவும் நாடுவேன்.

அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவரது அன்பு உங்கள் மேலும், உங்களிலும் இருப்பதாக. நீங்கள் அவரது உயிர்ப்பிக்கும் ஆவியின் வல்லமையில் வாழுவீர்களாக.

அன்பின் நதியே, தேவனுடைய இருதயத்திலிருந்து என்னுடைய இருதயத்தில் பாய்ந்து வருவீராக

Oh! River of Love, Flow from the Heart of God to my heart

Aletta N. Jacobsz

நாம் தேவனை நேசிப்பதால் இந்த ஜெபம் நம் இருதயங்களிலிருந்து எழும்ப வேண்டும். "அவர் ஒளியிலிருக் கிறது போல நாமும் ஒளியில் நடப் போம்". *(1 யோவா.1:7)* இதற்கு நாம் விலைக்கிரயம் செலுத்த வேண்டும். இந்த ஜெபத்திற்கு தேவன் பதில் தர அவர் நமது வாழ்வில் காணப்படும் பாவங்கள், சுயநலம் ஆகியவற்றை வெறுமையாக்க வேண்டும். தூய ஆவியானவர் நமது வாழ்வை நிரப்பு முன் அவர் தமது ஒளியை நம்மில் வீசி நாம் அறிந்திராத பாவங்களை நாம் பார்க்கச் செய்வார்.

மற்றவர்கள் பார்க்கக் கூடாதென்று நாம் ஒளித்து வைத்திருந்த இருளான பகுதிகளை நமக்குக் காண்பிப்பார். ஒரு காலக்கட்டத்தில் என் இதயத்தில் இருளான பகுதிகளும் அவற்றில் பாவங் களும் இருந்தன. நான் தேவனிடத்தில் மெதுவாகக் கூறியும் அவைகள் மாற வில்லை. எனது இருதயம் கண்ணாடி யால் ஆக்கப்பட்டிருந்தால் மக்கள் அதைப் பார்க்கும் போது நான் தலை குனிய வேண்டியதாயிருக்கும். நான் என் நண்பர்களிடம் எனது வெற்றி களைக் குறித்து கூறினாலும் எனது தோல்விகளை மறைத்து அவற்றை தேவனிடம் மெல்லிய குரலில் கூறு வேன். ஜெபிக்கும் போதும் என் நற் காரியங்களைக் மட்டும் கூறுவேன். ஆனால் ஒரு நாளில் தேவன் என்னைப் பார்த்து: 'நீ நேர்மையற்றவன்' என்றார். **'நீ உன் உடன் ஊழியர்களை ஏமாற்றுகிறாய். நீ என்னுடன் ஒளியில் நடக்க விரும்புகிறாய், ஆனால் பிறரோடு இருளில் நடக்கிறாய், அவர்களிடம் இதை சொல்லமாட்டாயா?'** என்றார்.

ஒரு நாள் இரவிலே அவையெல்லா வற்றையும் கிரயத்தைக் குறித்துக் கவலைப்படாமல் வெளியே கொண்டு வந்தேன். நான் வல்லமை நிறைந்த ஒரு வாழ்வை வாஞ்சித்தேன். ஒருவர் என்னிடம்: "தேவனிடமும் மனிதரி டமும் உங்கள் பாவங்களை வெளி யிட்டது துக்கமாயிருக்கவில்லையா?" என்று கேட்ட போது 'இல்லை நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன்' என்று பதிலளித்தேன். அன்றிலிருந்து அனேகர் தங்கள் தேவைக்காக என்னிடம் வர ஆரம்பித்தார்கள். தேவனும் அவர்கள் தேவைகளை சந்தித்தார். "தேவனே எனக்கு வல்லமை தாரும்" என்று ஜெபிப்பதைவிட "தேவனே என்னை சோதித்து உமது வல்லமை என்னில் விளங்க தடையாயிருப்பது என்ன?" என்று கேளுங்கள். அப்போது அவரு டைய வல்லமையைத் தருவார்.

ஏசாயா வல்லமையின் வாழ்வை வாஞ்சித்த போது முதலாவது ஆராய்ச்சி விளக்கு தான் முன் வந்தது. ஏசாயா ஒரு தேவ மனிதன் ஆயினும் அது அவருக்குத் தேவையாயிருந்தது. அந்த விளக்கு வந்த போது அவன் தரையில் விழுந்து "ஐயோ நான் அதமானேன், ...ஏனெனில் நான் அசுத்த உதடுகளுள்ளவன்" *(ஏசா.6:5)* என்று கதறினான். அவன் தனது பாவத்தை மறைக்கவில்லை. அவன் புத்தகத்தில் அதனைப் பதிவு செய்து, நாம் வாசித்து உணர்வடைந்து நேர்மை யாக வாழ வழிகாட்டுகிறான். தாவீதை நேர்மையுள்ளவனாக்க அவனது உதடுகள் அக்கினித் தழலால் தொடப் பட்டு சுத்தப்படுத்தப்பட்டன. உங்கள் இருதயத்திலும் இந்த ஆராய்ச்சி விளக்கு வைக்கப்பட்டால் நீங்களும் தாழ விழுந்து கண்ணீர் விடுவீர்கள். வல்லமை வந்து சேரும். வல்லமை வரும் போது அன்பின் கனி நமது வாழ்வில் வெளிப்படும்.

அன்பில்லாய்மை எனது ஒரு பாவம்

இரத்தம் சிந்தப்படாமலும், சிலுவையில்லாமலுமிருந்தால் நான் இவ்வாறு பேசாமலிருந்திருப்பேன். ஏனெனில் அன்பில்லாய்மை எனது ஒரு பாவம். நான் பாடம் சொல்லிக் கொடுத்த வகுப்பறையில் அடிக்கடி அன்பல்ல, பொறுமையின்மை என்று எழுதப்பட்டிருக்கும். எனது பொறுமை யின்மையை கட்டுப்படுத்தி ஒரு வாரம் எப்படியோ கழித்தேன். மாணவர் களிடம் இயேசுவால் வெற்றி வாழ்க்கை தரமுடியும் என்று கூற வெட்கப்பட் டேன். அவர்கள் என்னிடம் "ஏன் அத்தகைய வாழ்வை உங்களில் காண முடியவில்லை" என்று கேட்பார்களே; ஏன் அடிக்கடி கோபப்பட்டு பொறுமை யையும் இழந்து விடுகிறீர்கள்? உங்கள் உதடுகள் தேவ அன்பைப் பற்றி பேசி னாலும், "உங்கள் வாழ்க்கை கோபத்தை வெளிப்படுத்துகிறதே". பலவேளை களில் மாணவிகள் தூங்கும் போது நான் என் பொறுமையின்மைக்காகக் கண்ணீர் விட்டு அழுதேன். தேவனை நான் ஏமாற்றினேன்.

இந்த வகை பாவம் உங்களிலிருக் கிறதா? தேவன் உங்கள் இருதயம் நொறுக்கி கண்ணீர் விடுவதைக் காண்கி றாரா? அல்லது கண்ணீரே வரவில் லையா? வல்லமையுள்ள வாழ்வு வாழ முதலாவது அன்பு நிறைந்த வாழ்வைத் தேடுங்கள்.

ஒரு நாள் தேவன் என்னைப் போன்ற அன்பற்ற இருதயத்தை சுத்திகரிக்க வல்ல இரத்தம் உண்டு எனக் காண்பித்தார். அவர் அவரது அன்பை ஊற்றினார். அது என் சொந்த அன்பல்ல, கல்வாரியிலிருந்து வரும் அன்பு. அதே வகுப்பறைக்கு திரும்பச் சென்றேன். அங்கே சூழ்நிலை அது வாகவே இருந்தாலும் என் வாழ்க்கை வேறுபட்டிருந்தது. நான் பொறுமை யிழந்த வேளைகளில் தேவனுடைய பாதத்தில் விழுந்து, "ஆண்டவரே, என்னை மன்னியும். நான் மறுபடியும் பொறுமையை இழந்து விட்டேன். நான் மேலே பார்க்க முடியவில்லை. அதே பாவத்தைச் செய்து விட்டேன்" என்று சொல்லுவேன்.

அப்போது ஒரு அன்புக்கரம், இரத்தம் படிந்த நிலையில் என்னைக் கல்வாரியில் தூக்கி நிறுத்தியது. அன்பு என் வாழ்வில் புரண்டு ஓடியது. மாணவிகள் கோபமூட்டினார்கள். ஆனால் நான் வேறுவிதமாக எதிர் கொண்டேன். என்ன பெரிய வித்தி யாசம்! சூழல் அன்பால் நிரம்பியது. மிக எளிய கட்டளை அன்புதான். சில வேளை வகுப்பறையிலேயே அவரு டைய பிரசன்னத்தை உணர்ந்து ஒரு நிமிடம் நின்று அவரை ஆராதிப்பேன். அந்த வகுப்பறையிலேயே எழுப்புதல் வந்து விட்டது.

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பக்திரிகை வரக் குவரினால் உடனே குகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

அன்பே அடையாளம்

Love is the sign

John Mathews

அன்பு என்பது ஒரு அடையாளம். அதிக அளவிலான அன்பு தான் அடையாளம். தேவனால் பிறந்தவரிடம் இந்த அன்பு உண்டு. இது மறுபிறப்பின் அடையாளம். அன்பு கூருகிறவன் தேவனால் பிறந்தவன். அன்பில்லாதவன் தேவனை அறியான். நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கக் காரணம் அன்பு என்று நாம் அறிவோம். அதிசயங்களும் அற்புதங்களும் அடையாளமல்ல, மலைகளைப் பெயர்க்கத் தக்க விசுவாசமுமல்ல, தயாள சிந்தையால் ஏழைகள் போஷிக்கப்படுவதுமல்ல, விசுவாசத்திற்காக இரத்த சாட்சியாக எரிக்கப்பட்டோ இரத்தம் சிந்தியோ மரிப்பதுமல்ல, இவை விலையேறப்பெற்றவைதான். ஆனாலும் அடையாளமாவதில்லை. அந்த அன்பு எரிந்து பிரகாசிக்கும், பரிசுத்தமான, பரலோக, தேவ அன்பு. தூய ஆவியால் நமது உள்ளங்களில் ஊற்றப்பட்ட அன்பு.

நாம் அன்புகூர வேண்டியவர்கள்

1. நமது அயலார்:

அயலான் யார்? ஒருவன் இயேசுவிடம் தன் அயலான் யார்? எனக் கேட்ட போது, நல்ல சமாரியனது உவமையைக் கூறினார் லூக்.10:25-37 வரை வாசிக்கவும். ஒரு மனிதன் எரிகோ செல்லும் வழியில், தன் சொந்த நாட்டைச் சேர்ந்த திருடன் ஒருவனால் காயப்படுத்தப்பட்டு குற்றுயிராய் கிடந்தான். காயப்பட்ட யூதனை கண்டு தன் சகோதர உறவான ஆசாரியனும் லேவியனும் விலகிச் சென்றனர். ஆனால் யூதர்களால் வெறுக்கப்பட்டு பகைஞனாகக் கருதப்பட்ட சமாரியன் இரக்கம் கொண்டு, அவனிடத்தில் வந்து அவன் காயங்களைக் கட்டி தன் சொந்த மிருகத்தின் மேலேற்றி, சத்திரத்துக்குக் கொண்டு சென்றான். அவனை நன்கு பராமரித்த பின்பு சத்திரக்காரனிடம் தான் திரும்பி வரும் போது தேவையான பணத்தைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணி அவனது பாதுகாப்பினை உறுதி செய்து விட்டுச் செல்கிறான். ஒரு பகைவன்தான் இந்த உதவிதனைச் செய்தான். இதுவே தேவ அன்பு. எனவே அயலான் என்பது எந்த நிறம், ஜாதி, நிலையைச் சார்ந்தவர்களாயிருப்பினும் தேவையில் இருப்பவர்கள்- துன்பத்திலோ, துயரத்திலோ, வேதனையிலோ இருப்பவர்கள். அவர்கள்தான் நாம் நேசிக்க வேண்டிய அயலார்கள்.

2. நாம் நமது சகோதரர்களை நேசிக்க வேண்டும்:

இரண்டாவதாக நமது சகோதரர்களை நேசிக்க வேண்டும். என்னுடைய சகோதரன் யார்? தேவனால் பிறந்த எவனும் சகோதரனே, மறுபடியும் பிறப்பது ஒருவனை தேவனது குடும்ப அங்கத்தினனாக்குகிறது. எந்த வேறுபாடு இருந்தாலும் இடமோ, பயிற்சியோ, தேசமோ யாராயினும் மறுபடியும் பிறந்த அத்தனை பேரும் இயேசுவின் குடும்பத்தினர்: "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன் ...தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டும்..." *(1 யோவா.4:20,21)* நமது சகோதரர்களை அற்பமாயெண்ணுவது ஆபத்தானது.

3. நாம் நம்முடைய பகைஞரை நேசிக்க வேண்டும்:

அன்பு நமது அயலார், சகோதரர், நமது சத்துருக்கள் அனைவரையும் சூழ்ந்து கொள்ளுகிறது. சகோதரனை நேசிப்பது கிறிஸ்துவில் ஒரு மகிழ்ச்சி. ஒரு அயலானை அவனது தேவையில் நேசிப்பது நமது மனவுருக்கத்திலிருந்து எழும்புகிறது. ஆனால் சத்துருவை நேசிப்பது - பலவந்தம். தேவ அன்பால் நிரப்பப்பட்டால் மட்டுமே இதை செய்ய முடியும். அது ஒரு மன உணர்வாயிருக்க வேண்டாம். ஒரு தூய அன்பின் அனலுடன் இதயபூர்வமாக, தேவன் நமக்குக் காண்பித்த அன்பு போலவுமிருக்க வேண்டும். நம்மை விரோதிக்கிறவர்களை பகைப்பது அல்ல, ஆசீர்வதிக்கிற சுறுசுறுப்பான, சக்தி நிறைந்த அன்பாயிருக்க வேண்டும். எந்த அளவுக்கு இந்த அன்பு காண்பிக்கப்பட வேண்டும்? அவன் தாகமாயிருந்தால் அவனது நாவுக்கு தண்ணீரும், பசியாயிருந்தால் வயிற்றிற்கு போஜனமும் கொடுக்க வேண்டும். கெட்டுப் போன உணவையல்ல, ருசியான புது உணவைச் சூட்டோடு அடுப்பிலிருந்தே எடுத்துக் கொடுக்க வேண்டும். வேதம் எப்படி தெளிவாகக் கூறுகிறது: "அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடு, அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானம் கொடு" *(ரோம.12:20)*

வாழ்வுக்கும் அன்புக்கும் ஆதாரம்

The source of Life and Love

"அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் .....வேண்டிக்கொள்கிறேன்" எபேசி.3:19.

தெய்வீக ஆண்டவராகிய இயேசுவின் பிரசன்னம், நமது வாழ்வுகளை பயபக்தியுள்ளவைகளாக்குவதோடு உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும் மாற்றுகிறது. நமது சக்திகளை உயிர்ப்பித்து நிலைநிறுத்துகிறது. அவர் நம்மோடிருந்து ஒரு தந்தையின் பாசத்தோடும், தாயின் அரவணைப்புக்கு மேலாகவும், சகோதரனின் கருணைக்கு அதிகமாவும், ஒரு நண்பனின் உத்தமத்துக்கு மேலாகவும் ஒரு மணவாளனின் இன்பத்துக்கும் கூடுதலாகவும் நேசிக்கிறார். இந்த எண்ணம் நம்மை உற்சாகப்படுத்தட்டும். ஒரு போதும் நாம் தனிமையையும் களைப்பையும் உணர வேண்டிய தில்லை. நமது இருதய தியானங்களிலெல்லாம், மனிதரோடுள்ள சம்பாஷணைகளிலும், நமது இரகசிய அமைதியான துக்கங்களிலும் குழப்பங்களிலும், பொது விடங்களில் நமது வார்த்தைகளிலும் செயல்களிலும் நாம் இயேசுவுடனிருக்கிறோம். அவரது இனிய பிரசன்னமே நமக்கு இளைப்பாறுதலும் பெலனுமாயிருக்கிறது. இவ்வித உறவின் மூலம் இயேசுவின் சாயலை நாம் அடைகிறோம்.

- Adolph Saphir

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்". *(யோவா.14:15)* "...ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வார்த்தைகளைக் கைக் கொள்ளுவான். ... என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான்" *(யோவா.14:23,24)* தூய ஆவியானவரால் நம்முடைய இருதயங்களில் தேவ அன்பு ஊற்றப்படும் போது தான் நாம் கீழ்ப்படிதலின் கனியை எதிர்பார்க்க முடியும்.

அன்பு இயேசுவின் இருதயத்திலிருந்து ஒரு எளிய பாவியான விசுவாசியின் இருதயத்தில் பாய்ந்து, சுயநலம், குளிர்ந்த நிலை, மேற் கொள்ளும் பாவநிலை இவற்றினை வெளியேற்றி முழுமையான அர்ப்பணத்திற்கு ஏதுவாக சுத்திகரிக்கிறது. எனவே இயேசுவுக்காக அந்த ஆத்துமா அக்கினியாகவும், மன்னிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, குழந்தையாக தத்தெடுக்கப்பட்டு, "ஆண்டவரே, இதோ நான் ஜீவபலியாக என்னை ஒப்புவிக்கிறேன். நித்தியம் நித்தியமாக நான் உமக்கே சொந்தம்" என அறிவிக்கிறது.

- ஆக்டேவியஸ் வின்ஸ்லோ

கிறிஸ்துவை இன்றும் அதிகமாக நேசிக்க அவரை நேசிக்கவில்லையே என்று அடித்துக் கொள்வதால் எந்த பயனுமில்லை. அதிகமாக அறிந்தவர்களைத்தான் கூடுதலாக நேசிக்க முடியும். அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதும் வீண். அன்பும் கடமையும் இணைந்து நன்கு செயல்படுவதில்லை. நான் கூறுவது என்னவென்றால் அன்பைப் பற்றி பேசுவது கடமையினால் அழுத்தப்படுவது பொருத்தமல்ல. அன்பு என்பது தேன் கூட்டிலிருந்து ஒழுகும் முதற்சொட்டு. அது புதிதாகவும் தானாகவும் வடியக் காரணம் தேன்கூடு நிறைந்து வழிகிறது.

இது போலதான் உத்தம அன்பும் காணப்படுகிறது. நீங்கள் இயேசுவை

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக நேசிக்க விரும்பினால், அவரைப் பற்றி அதிகமாக சிந்தியுங்கள். அவரிடமிருந்து பெற்று அனுபவித்த நன்மைகளை அதிகமாக யோசித்துப் பாருங்கள். அவருடைய குணாதிசயங் களை வேத வசனத்தில் அதிகமாகப் படியுங்கள். ஜெபத்தின் மூலமாக அவரோடு அடிக்கடி நெருங்கிச் சேருங் கள். தூய உறவை அவரோடு அதிக மாக்கிக் கொள்ளுங்கள். அப்போது தான் அந்த அன்பு பற்றி எரிய தூண்டு தலாயிருக்கும். இதுதான் நமது ஆத்துமா இயேசுவின் மேலுள்ள அன்பில் பற்றி யெரிய பயன்படும் இரகசிய எரிபொருள்.

சார்லஸ் ஸ்பர்ஜன்

சபைக்கு ஆண்டவர் செய்ததெல் லாம் அவரது அன்பை வெளிப்படுத்திய தாகும். பெத்லகேமிலே நான் பயணித்த போது அன்பின் அவதாரத்தை உணர முடிந்தது. அங்கு நன்மை செய்கிற வராக அவர் சுற்றி நடந்தார். அன்பின் உழைப்பை அங்கு நான் கண்டேன். பெத்தானி வீட்டை நான் பார்த்த போது அவருடைய மனஉருக்கத்தினை உணர்ந்தேன். லாசருவின் கல்லறை யண்டையில் கண்ணீர்விட்ட இயேசு வின் அன்பைக் கண்டேன். மந்தமான கெத்செமெனே தோட்டத்தில் நுழைந்த போது துக்கத்தால் நிறைந்து வியாகுலத் தோடு ஜெபித்த அன்பினை உணர்ந் தேன். கல்வாரிச் சிலுவையண்டை சென்ற போது பாடுபட்டு, இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுக்கும் இயேசு வின் அன்பைப் பார்த்தேன். அவரது வாழ்வு முழுவதுமே, ஆழமும் ஆச்சரிய மும் விலையேறப் பெற்றதுமான விடுவிக்கும் அன்பை வெளிப்படுத்து வதாயிருந்தது.

ஆக்டேவியஸ் வின்ஸ்லோ

அவருக்காக மட்டும்

For His sake

S.J. Humphrey

ஒரு வருடத்திற்கு முன்னால் எங்கள் வீடு தீப்பிடித்து விட்டது. அது நடு இரவாக இருந்தபடியால் நாங்கள் தூக்கத்தில் இருந்தோம். ஜூவாலை முதலாவது ஒரு அயல்வீட்டாரால் கண்டு பிடிக்கப்பட்டு அவர் எச்சரிக்கை ஒலி எழுப்பினார். வீடு முழுவதும் புகை நிரம்பியிருந்தது. நாங்கள் மேல் வீட்டறையிலிருந்தோம். மாடிப்படி ஏற்கனவே நெருப்பால் பாதிக்கப் பட்டிருந்தது. நாங்கள் அனைவரும் உயிரோடு வெளிவந்தது ஒரு அதிசயம். இருளுக்குள் மூச்சுத் திணறிக் கொண்டி ருந்த எங்களை எங்களது அண்டை வீட்டு மனிதர் தான் மாடிப்படிகள் வழியாக வெளியே திறந்த வெளிக்கு கொண்டு வந்தார். ஆனால் அவர் ஜீவனைப் பணயம் வைத்துத்தான் இச்செயலை செய்தார். ஆனால் அவர் மூச்சிரைத்ததை நாங்கள் பார்த்து அப்போதே மரித்து விடுவார் என்று எண்ணினோம். எங்களைப் பாதுகாக்க அவர் எடுத்த முயற்சியில் அவரது புயங்களும் மார்பும் அதிகமாக எரிந்து போயின. அவர் மூச்சிழுக்கும் போது சூளையின் வெப்பக் காற்றை போன்ற சூடான காற்றை நுரையீரலுக்குள் எடுக்க வேண்டியதாயிருந்தது. கடைசிக் குழந்தையைக் கைகளில் ஏந்திக் கொண்டு வாசலில் வந்த போது தடுமாறி விழுந்தார். அந்த நேரத்தின் துயரத்தை நான் மறக்க முடியாது. அவர் எங்களை இரட்சித்தார். ஆனால் அவரோ எங்களுக்காகச் செத்துக் கொண்டிருந்தார். மிகவும் திறமையான வைத்தியர்கள் அழைக்கப்பட்டார்கள். நாங்கள் அவரை அவரது சொந்த இல்லத்திற்கு கொண்டு சென்றோம். உடனடி ஆபத்து நீங்கினாலும் பல மாதங்கள் அவர் ஜாக்கிரதையுடன் மருத்துவ உதவி பெற்றால் மட்டுமே சாதாரண நிலைக்கு வர முடியும் என்பது தெளிவாயிற்று.

எங்கள் குடும்பத்தின் பிரதிவினை

அந்த அயல்வீட்டுக்காரர் ஒரு அனுதின கூலி வேலை செய்பவர். அவர் குடும்பம் முழுவதும் அவரது வருமானத் தில் தான் வாழ்ந்தது. எங்கள் குடும்பத் தினர் அனைவரும் அக்குடும்பத்தின் பராமரிப்பைப் பொறுப்பெடுத்துக் கொள்ள தீர்மானித்தோம். அவர்கள் குடும்பத்தோடு எங்களுக்கு ஒரு உறவு தோன்றியது. என்ன செய்ய வேண்டு மென்று விரைவில் முடிவெடுத்தோம்.

எனக்கு இருந்த தொழில் மூலம் நல்ல வருமானமிருந்தது. அந்த மனித னின் மனைவி வீட்டுக் கவலைகளிலி ருந்து விடுபட்டு அந்த மனிதனை நன்கு கவனிக்கச் செய்தோம். அவளும் அவனை பரிவுடன் கவனித்துக் கொண்டாள்.

எனது மூத்தமகள் விரைவில் இசை வகுப்பு ஆரம்பித்தாள். அடுத்தவளும் கின்டர் கார்ட்டன் பள்ளி ஒன்றில் வேலை பெற்றாள். எங்கள் இருதயத் தின் ஆவலை பூர்த்தி செய்ய என் பிள்ளைகள் எடுத்துக் கொண்ட முயற்சி களால் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். கடைசியாக காப்பாற்றப்பட்ட எங்கள் மகன் சார்லி தன்னைவிட ஒரு வயது குறைந்த அந்தக் குடும்பத்தின் சிறுவனை பொறுப்பெடுத்துக் கொண் டான். அவன் தனது உடைகள், பள்ளி புத்தகங்கள், விளையாட்டுப் பொருட் கள் அனைத்தையும் அச்சிறுவனோடு உற்சாகமாகப் பகிர்ந்து கொண்டான்.

எங்களுக்காக அந்த மனிதன் சகித்த சரீர பாடுகளை எங்களால் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஒரு உத்தம மனதோடு சில காரியங்களை சுய தியாகத்தோடு நாங்கள் செய்தது திருப்தி அளித்தது. எங்களால் செய்யக் கூடியதை செய் தோம், எங்கள் நன்றியைக் காண்பித் தோம். அது எங்களுக்காக அந்த மனிதர் அனுபவித்த பாடுகளுக்கு பதிலாக செய்த சிறிய அளவிலான நன்றி மட்டுமே

சோதனைகள்

பல நாட்கள் உற்சாகத்துடன் கழிந்தன. இப்போது நாங்கள் தங்கு மிடம் அசௌகரியமாயிருந்தது. முந்திய சொகுசான வாழ்வு நின்று போனது. பல வேளைகளில் பிரச்சனைகளை ஏற்படுத் தியது.

ஒரு நாள் ஒரு தொழிலதிபரான நண்பர் அவரது புதிய வீடு கட்டுமிடத் திற்கு என்னை அழைத்துச் சென்றார். அதைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியா யிருந்தது. நானும் ஒரு நாள் அவ்வித மான வீட்டைக் கட்ட எண்ணங் கொண்டிருந்தேன். அறைகள் அனேக மாகவும் விசாலமாகவுமிருந்தன. நவீன சௌகரியங்கள் எதற்கும் குறைவில்லா திருந்தது. இப்பேர்ப்பட்ட ஒரு வீட் டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை மேலோங்கியது. சுய விருப்பத்தின் ஆவி திரும்பி வந்து நான் சுதாரிப்பதற்குள் என் இருதயத்தின் பொறுமையின்மை புதிய செலவினங் களை குழப்பமாக வளர்த்தி விட்டது. ஆனால் ஒரு வினாடிதான் சில நிமிடங்கள் நான் நடந்த போது நான் என்னை உணர்ந்து கொண்டேன். என் வெறுப்பான எண்ணத்தை முற்றிலும் விட்டு விட்டேனா என்பதற்காக நானும் மனைவியுமாக எளிய தொகை செலுத்தக்கூடிய ஒரு சுத்தமான குடிசையை நிர்ணயித்தோம். எனக்காக தியாகம் செய்த அந்த மனிதன் நடக்கு மளவிற்கு சுகமடையும் போது அந்த வீட்டைக் கொடுத்து விட தீர்மானம் செய்தோம்.

புதிய வாய்ப்பு

எனது நண்பர் நடக்க ஆரம்பித்த வுடன் அவரது உள்ளத்தில் பாரமாயிருப் பதைக் கண்டேன். அவர் ஒரு சிறிய மிஷன் பள்ளிக்குத் தலைவராயிருந் திருக்கிறார். அப்பள்ளி பட்டணத்தின் புறக்கணிக்கப்பட்ட பகுதியில் இருந் தது. அவரில்லாத போது அது வீழ்ச்சி யடைந்து விட்டது. அடுத்த ஓய்வு நாளிலிருந்து எங்கள் குடும்பத்தினரே அதை நடத்த ஆரம்பித்தோம். அது எங்களுக்கு ஒரு புதிய தொழில். ஆனால் அந்த நபருக்காக முழு ஆத்துமாவோடு அதை செய்தோம்.

அப்பள்ளி வளர்ச்சியால் அம் மனிதரும் மகிழ்ச்சி அடைந்தார். குளிர்காலத்தில் அங்கு ஓர் எழுப்புதல் ஏற்பட்டது. அந்த சந்தோஷம் அவருக்கு நல்ல முன்னேற்றத்தை அளித்தது. அந்த விபத்து நடந்து ஒரு வருடத்தில் அவர் பூரண குணமடைந்து புதிய இல்லத்தில் பிரவேசித்து தன் பழகிய வேலைக்குச் சென்றார்.

எதிர்பாராத விளைவுகள்

சுய ஒறுப்புக்கும் அக்கரைக்கும் எதிர்பாராத விளைவு அதே வருடத்தில் வந்தது. அந்த மனிதனுக்கு நேராக

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் இழுக்கப்பட்டு ஒரு வீர போராட்டம் நடத்திய போது எங்கள் குடும்பத்திலும் ஒருவருக்கொருவர் முன்பு இராதபடி இழுக்கப்பட்டோம். ஒரு புதிய உருக்கம், பொறுமை ஆகியவை குடும்பத்தில் வந்தன. எங்கள் உள்ளங்கள் சேவையிலும் தியாகத்திலும் சென்ற போது எங்கள் இருதயங்கள் மெதுவாகி நாங்கள் இணைக்கப்பட்டு ஒரு புதிய சந்தோஷமான குடும்ப வாழ்க்கையின் காலகட்டத்தில் பிரவேசித்தோம்.

இன்னொரு எதிர்பாராத விளைவு என்னவென்றால், என்னுடைய தொழிலில் அது மிகுந்த வெற்றியுள்ள ஆண்டாயிருந்தது. ஒரு போதும் இவ்வளவு கையிருப்பு என்னிடமிருந்ததில்லை. தேவையற்ற செலவினங்கள் குறைந்திருந்தன. எனது வேலையாட்கள் மிகவும் முன்னேற்றமடைந்திருந்தார்கள். நானும் தவறுகள் கெட்ட முயற்சிகள் தவறான கணக்குகள் இவற்றிலிருந்து விலகியிருந்தேன். தேவனுடைய கரம் எங்கள் மீது தொடர்ந்து இனிமையாய் அமர்ந்திருப்பதை நாங்கள் நன்கு உணர முடிந்தது.

விபத்து நடந்து ஒரு வருடம் முடிந்த வருடாந்தர விழாவில் எங்கள் அனுபவங்களை நாங்கள் திரும்பிப் பார்த்தோம். தாழ்மையான நன்றி உணர்வுடன் வாழ்வின் ஒரு உயர் நிலைக்கு வந்திருப்பதைப் பார்த்தோம். மறுபடியும் சுயவாழ்வுக்குச் செல்ல நாங்கள் விரும்பவில்லை. "இந்த மனிதனுக்காக இவற்றை நாம் செய்தால் கிறிஸ்துவுக்காக எவ்வளவு அதிகமாகச் செய்ய வேண்டும்" என்ற எண்ணம் தொடர்ந்து எங்களில் காணப்பட்டது.

எங்கள் வாழ்க்கையின் அனுபவம் ஆண்டவராகிய இயேசுவின் பாடுகளை எப்போதும் நினைக்கத் தூண்டியது. நாம் எரிகிற அக்கினிக்குத் தப்பிய கொள்ளிகள். நாம் நமக்குரியவர்களல்ல. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்.

நாம் நமக்காக வாழாமல் ஆண்டவருக்காக நலமானவைகளைச் செய்வோம். இது எளிதானதும், இயற்கையானதும், மிகச்சரியானதுமாகும். கிறிஸ்துவின் பணியே நமது பணி. அவரது சபை அவரது எளியோர், அவரது சிறியோர் மற்றும் உலகம் முழுவதும் இரட்சிப்படைய அவரது ஆத்துமா வேதனைப்படுவது போல நாமும் வேதனைப்பட வேண்டும். எனது பிள்ளைகள் வீட்டு சுவரில் "அவருக்காகவே, அவருக்காகவே" என எழுதி வைத்திருக்கிறார்கள். நாம் நமது இருதயங்களில் இதனை நிலைவரமாக வைத்திருக்க தேவன் உதவி செய்வாராக.

அயலான் என்பது எந்த நிறம், ஜாதி, நிலையைச் சார்ந்தவர்களாயிருப்பினும் தேவையில் இருப்பவர்கள்-துன்பத்திலோ, துயரத்திலோ, வேதனையிலோ இருப்பவர்கள். அவர்கள்தான் நாம் நேசிக்க வேண்டிய அயலார்கள்.

அன்பு

Love

Andrew Murray (1828 - 1917)

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்". (யோவா.13:34,35)

"அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." (ரோம.13:10)

"பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்... நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்." 1 யோவா.4:11-12

இயேசுகிறிஸ்து புதிய கட்டளையாகதாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் போது சகோதர அன்பைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சீஷனுடைய முக்கிய குணம் இது. எனவே முழு மனதோடு இந்த கட்டளைக்குக் கீழ்ப்படிவோம்.

சகோதர அன்பு பிதாவின் அன்பிலிருந்து எழும்புகிறது

தேவ அன்பு தூய ஆவியானவர் மூலமாக நமது இருதயங்களில் ஊற்றப்படுகிறார். பிதாவின் இந்த ஆச்சரியமான அன்பு நமக்கு வெளிப்படுத்தப்படுவதால், அவரது அன்பு நமது ஆத்துமாவுக்கு ஜீவனும் சந்தோஷமுமாக மாறுகிறது. தேவ அன்பு நம் மேலுள்ள அவரது அன்பின் ஊற்றிலிருந்து ஊறுகிறது. அவர் மேலுள்ள நமது அன்பு இயற்கையாகவே சகோதரரை நேசிக்கச் செய்கிறது. நீங்களாகவே இந்தக் கட்டளையை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டாம். நீங்கள் அந்த நிலையிலிருக்கவில்லை. உங்களிலிருக்கிற தூய ஆவியானவர் தேவ அன்பை உங்களுக்கு அறிவிக்கவும், அதைக் கொடுக்கவும் உதவுகிறார் என்பதை விசுவாசியுங்கள். "எனக்கு நேசிக்கும் உணர்வே இல்லை, இந்த மனிதனை மன்னிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவே இல்லை" என்று சொல்ல வேண்டாம். நீங்கள் செயல்பட எடுக்கும் தீர்மானம் உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொள்ள கூடாது. கட்டளையை விசுவாசிப்பதும் அதற்குக் கீழ்ப்படிய தேவன் வல்லமையளிக்க அவர் மீது நம்பிக்கை வைப்பதும் உங்கள் கடமை. பிதாவுக்குக் கீழ்ப்படிந்து உங்கள் சித்தத்தின் தெரிந்து கொள்ளுதலின்படியும், தூய ஆவியானவர் இந்த வல்லமைதனைக் கொடுப்பார் என்ற விசுவாசத்துடனும் "அவரை நான் நேசிப்பேன். இப்போது அவரை நேசிக்கிறேன்" என்று சொல்லுங்கள். இந்த உணர்வு தொடர்ந்து விசுவாசத்தைத் தரும். பிதா உங்களிடம் கேட்பதை எல்லாம் கிருபை வல்லமைப்படுத்தும்.

சகோதர அன்பு அளவையுடையது மற்றும் இயேசுவின் அன்பிலிருந்த அதிகாரம்

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.நமக்குள் கிரியை செய்யும் நித்திய ஜீவன் இயேசுவினுடைய ஜீவனாகும். அவரில் நாம் காண்கிறது அதுவே. அதற்கு வேறே கட்டளைகளில்லை. அவரில் கிரியை செய்த அதே வல்லமை நம்மிலும் கிரியை செய்கிறது. இயேசுவே நம்மில் வாழ்கிறார். நம்மிலிருந்து அன்புகூருகிறார், நம்மூலமாகவும் அன்பு கூருகிறார். நம்மில் அவரது அன்பின் வலிமையை விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசத் தில் அவர் நேசித்தது போல நேசிக்க வேண்டும். அவர் நேசித்தது போல நாம் நேசிப்பது தான் உத்தம இரட்சிப்பு.

சகோதர அன்பு செயலிலும் உண்மையிலும் இருக்க வேண்டும்

சகோதர அன்பு ஒரு உணர்ச்சி மட்டுமல்ல. கிறிஸ்துவின் வல்லமை விசுவாசத்திலிருந்து எழும்பி அன்பினால் கிரியை செய்கிறது. அது தேவ வசனத்தில் விசேஷமாக குறிப்பிடப் பட்டிருக்கும் கிறிஸ்துவின் குணநலன்கள் மூலமாக தன்னை வெளிப்படுத்துகிறது. அதன் மகிமையான சாயலை 1 கொரி.13:4-7 வசனங்களில் படித்து சிந்தியுங்கள். உங்கள் எல்லா நடத்தைகளிலும் ஆண்டவரின் அன்பு உங்களில் இருக்கிறது என்று வெளிப்படட்டும். உங்கள் அன்பு உதவி செய்வதும், சுயதியாகமுள்ளதுமாய் இயேசுவின் அன்பைப் போலிருக்கட்டும். எப்படிப் பட்ட பாவம் நிறைந்த, தவறு செய்கின்ற மக்கள் என்றாலும் அன்பாயிருங்கள். அவர்களை நேசிப்பதின் மூலம் எல்லோரையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குடும்பம், சபை, உலகம் எல்லாவற்றிலும் "அன்பே பெரியது" 1 கொரி.13:13. உங்கள் வாழ்வில் தேவ அன்பு முழுமையாய் வாசம் பண்ணி, செயல்படுவதைக் காண்பியுங்கள்.

கிறிஸ்தவனே, தேவன் அன்பாகவே இருக்கிறார். இந்த அன்பின் பரிசு தான் இயேசுகிறிஸ்து. அவர் உங்களில் வந்து, தேவனைப் போன்ற அன்புடையவர்களாய் வாழச் செய்கிறார். அந்த விசுவாசத்தில் வாழ்ந்தால் அன்புகூர வல்லமையில்லை என்று கூறமாட்டீர்கள். ஆவியானவரின் அன்பு உங்கள் வல்லமையாகவும் ஜீவனாகவும் இருக்கட்டும்.

அன்புள்ள இரட்சகா, புதுவாழ்வின் வாழ்வே அன்பில்தானிருக்கிறது

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை நான் புரிந்து கொள்கிறேன். நீர் தேவ அன்பின் குமாரன். அவரது அன்பின் பரிசு, அவர் இவ்வுலகில் வந்து அவரது அன்பை அறிமுகம் செய்து அதில் வாழ இடமளிக்கிறார். தூய ஆவியானவர் தேவ அன்பினை எங்கள் இருதயங்களில் ஊற்றி அது உமக்கு நேராகவும், சகல விசுவாசிகள், உலக மக்கள் மீதும் பாய்ந்தோடச் செய்கிறார். ஆண்டவரே, அன்பினால் நான் மீட்கப் பட்டேன், நான் அன்புக்காக வாழவும் அதன் சத்துவத்தில் வாழவும், எல்லா ரையும் நேசிக்கவும் உதவி செய்யும். ஆமென்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக ஒரு சபையின் போதகர் சக்கர நாற்காலியில் சிறிது நேரம் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டார்கள்.

சிறப்பாக எனது நண்பர், போதகர் ***எஸ். சாம் செல்வராஜ்*** அவர்களுக் காக தேவனை துதிக்கிறேன். நான் வியாதிப்பட்டு, படுக்கையில் இருந்த நாட்களில் எங்கள் இல்லத்திற்கு வந்து ஜெபித்துச் சென்றார்கள். அவருடைய நவம்பர் மாத பத்திரிகையில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

"1969-ஆம் வருடம் நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட வுடன், மூன்று வருடகாலம், காலஞ் சென்ற அருமை தேவ ஊழியர் **வருகையின் தூதன்** பத்திரிகை ஆசிரியரான போதகர் ***எஸ். தேவதாசன்*** அவர்கள் என்னைத் தம்முடன் ஊழியத்தில் சேர்த்து எனக்குப் பல்வேறு விதங்களில் ஆவிக் குரிய ஊழியப் பயிற்சி அளித்தார்கள்.

ஒரு முறை நான் அவர்களுடன் இரவு நேரத்தில் அதிக நேரமாக ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று என்னிடம் வருங்காலத்தில் உலகம் எப்படி இருக்கப் போகிறது என்பதையும், என்னைக் கொண்டு தேவன் என்னென்ன காரியங்களைச் செய்யப் போகிறார் என்பதையும் என்னிடம் விளக்கிக் கூறினார்கள். அவர்கள் என்னிடம் சொன்னக் காரியங் கள் எனக்கு மிகப் பெரியவைகளா யிருந்தன."

* * * *

சென்னை பட்டணத்தில் 7 மணி நேர உபவாச ஜெபங்களை நடத்துவதற் காக நாங்கள் குழுவாக வரும்பொழு தெல்லாம், எழும்பூர் ரயில் நிலையத்தில் இறங்கி, பாஸ்டர் சாம் செல்வராஜ் அவர்களுடைய விருந்தினருக்கான மாடியில் தங்குவதையும், ஞாயிறு இரண்டு தமிழ் ஆராதனைகளில் தேவ செய்தி அளிப்பதையும் ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன்.

பாடல்

என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதையார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ

ஆறாவதாக உறவினர்கள் பற்றி எழுது கிறேன்:

எனது உறவினர்கள் சிலர் சென்னையில் இருக்கிறார்கள். சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் நான் அறுவை சிகிட்சை செய்த போது அவர்கள் உதவி செய்தார்கள். ஒருவர் மணலியில் A.G. சபை ஊழியராயிருந்து தன்னுடைய ஆலயத்தை உபவாச ஜெபத்திற்கு திறந்து தந்தார். வேறு ஒரு குடும்பம் அந்தமானில் உபவாச ஜெபம் ஒழுங்கு செய்தார்கள், உபவாச ஜெபங்களில் கலந்து கொள்வார்கள்.

பாடல்:

நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்தனை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா

ஏழாவதாக அன்பான வாசகரைப் பற்றி எழுதுகிறேன்:

தேவ கிருபையால் ஏராளமான வாசகர்களின் பெயர்கள் என்னுடைய ஞாபகத்தில் இருக்கிறது. அதில் அநேகர் சென்னையில் இருக்கிறீர்கள். "நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப் பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்பொழுதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி, ... நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்". பிலி.1:4,6

பாடல்:

ஆத்தும இரட்சிப்பிழந்தவர்
ஆயிரம் ஆயிரமாய்
அன்றாடகம் இந்த மண்ணடியில்
அழிந்து சாகின்றாரே

பாவம் பெருகுதே
பாரும் பரன் இயேசுவே
அழியும் மனுக்குலம்
அதையும் இரட்சிப்பீரே

சென்னை பட்டணத்திற்காக நீங்கள் கண்ணீர் விடுகிறீர்களா?

ஆசிரியர் கடிதத்தைத் தொடர்ந்து, ஒரு தேவ மனிதர் எழுதிய "எந்த பட்டணங்களுக்காக கண்ணீர் விடுகிறீர்கள்?" என்ற தேவ செய்தியை அச்சிடுகிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295** **உங்கள் அன்பு சகோதரன்**
அலுவலகம் : **95432 21008** **வெஸ்லி தேவதாசன்**

எந்த பட்டணங்களுக்காக நீங்கள் கண்ணீர் விடுகிறீர்கள்?

பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு நேராக பவனியாக இயேசு வந்தபோது அதிர்ச்சி தரும் ஒரு சம்பவம் நடந்தது. அவரது பாதை வளைந்து பட்டணத்திற்கு இறங்கிய போது எருசலேமின் முழுமையான காட்சி அவர் கண்களில் பட்டது. ஒரு திரள் கூட்டமான கலிலேயரும், சீஷர் குழுவும் அவரோடிருந்தனர். அவர்கள் அனைவரும் உற்சாகத்துடனும், சந்தோ ஷத்துடனும், "**கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர், பரலோகத் திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக**" லூக்.19:37,38 என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்.

அதேவேளையில் அனைவரும் ஆச்சரியப்படும்விதமாக இயேசு சத்த மிட்டு அழுதார். லூக்கா சாதாரண வார்த்தையை 'அழுதார்' என்பதற்கு பயன்படுத்தாமல் கிரேக்க மூல பதத்தில் ஒரு ஆத்துமா மிகுந்த வேதனையில் சத்தமிட்டு அழுவதற்கு ஒப்பான வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். எருசலேம் இயேசுவால் நேசிக்கப்பட்ட பட்டணம். அதற்காக அவர் மரிக்கவும் ஆயத்தமாயிருந்தார். அவரது ஆத்துமா இப்போது இதய வேதனையில் கண்ணீர் வடிக்கிறது. அவர் எருசலேமை நேசித் தார். எருசலேமோ அவரை நேசிக்க வில்லை.

இயேசுவின் கண்ணீர், பிதா வாகிய தேவனுடைய கண்ணீரும் தேவனாகிய பரிசுத்த ஆவியினுடைய கண்ணீருமாயிருக்கிறது. இயேசுவின் அழுகையின் குரல் திரித்துவ தேவ னுடைய வேதனையைக் காண்பிக் கிறது. இயேசு வேதனையோடு அழுதது இந்த ஒரு முறை மட்டுமல்ல, லூக்.13:34 -விலும் "**எருசலேமே, எருசலேமே ..... கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று**" என்று இயேசு கண்ணீர் வடித்திருக்கிறார்.

முன்பு கலிலேயாவில் கிராமங் கள்தோறும், பட்டணங்கள்தோறும் போதித்துக் கொண்டும், பிரசங்கித்துக் கொண்டும், வியாதியஸ்தரைக் குண மாக்கிக் கொண்டும் சுற்றி நடந்தபோது "**அவர் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகி.....**" (மத்.9:35,36) என்று வாசிக்கிறோம். அதே மனதுருக்கம், தேவன் மகா பெரிய நகரமாகிய நினிவே மேல் கரிசனையும் அன்புமுடையவராயிருக்கச் செய்தது. அந்த நகரமோ தமது ஜனத்துக்கு எதிரானது யோனா4:11. தேவன் ஒவ்வொரு பட்டணத்திலுள்ள மக்களையும் நேசிக்கிறார். அவர் தெரிந்து கொண்ட எருசலேமோ அல்லது பகைமையின் பட்டணமாகிய நினிவேயானாலும் சரி எல்லாவற்றை யும் அவர் ஒன்று போல நேசிக்கிறார்.

அன்று எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்ட ஆண்டவர் இன்று நமது பட்டணங்களைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார். நீங்கள் கண்ணீர் விடுகிறீர்களா? இயேசு இன்றைய நகரங்களைப் பார்த்து ஏன் அழுகிறார்? ஏராளமானோர் அங்கு வசிக்கிறார்கள். அவர்களை அவர் அளவற்ற அன்போடு நேசிக்கிறார். அவர்களை இரட்சிக்க அவர் விரும்புகிறார். அவர்களுக்காகவும்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மரித்தாரே, ஆயினும் அவர்கள் பாவம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். **தேவன் பாவத்தை வெறுப்பவர், ஆனால் அவர் பாவிகளை நேசிக்கிறார்.** தேவன் சாத்தானிடம் எரிச்சலோடிருக்கிறார். ஏனெனில் அவன் மக்களை ஏமாற்றுகிறவனும் அழிக்கிறவனுமாயிருக்கிறான். ஆனால் தேவனுடைய இருதயம் அன்பாலும் இரக்கத்தாலும் ஒவ்வொரு பாவிக் காகவும் வருந்துகிறது. அவர் ஒருவரும் அழிந்துபோவதை விரும்பாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டு மென்று ஆவலாய் இருக்கிறார்.

ஏசாயா 65:1-2 வரையுள்ள வசனங்களில் கூறப்படும் மனதுருகும் தேவனுடைய அன்புடன், தேடுகிறதும், வாஞ்சிக்கிறதுமான இருதயத்தை எண்ணிப்பார்க்கிறீர்களா? "**என்னைக் குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங் காதிருந்த ஜாதியை நோக்கி இதோ இங்கே இருக் கிறேன் என்றேன்.... முரட்டாட்டமான ஜனத்தண் டைக்கு நாள்முழுதும் என் கைகளை நீட்டினேன்**" என்கிறார். நீங்கள் அவரைப் பார்க்கிறீர் களா? நீங்கள் அவரைப் பார்க்க முடியுமா? இயேசு நமது பட்டணங் களையும், நெருக்கமான தெருக்களை யும், திரளான நமது வீடுகளையும் பார்த்துக் கொண்டு நிற்கிறார். ஏராள மான தேவையுடன் நிற்கும் மக்கள் அவரைத் தவிர வேறு எல்லா இடங் களுக்கும் உதவிக்காகத் திரும்புகிறார் கள். அன்பு நிறைந்த வாஞ்சையோடு, கரங்களை நீட்டியவராய் அவர் களைப் பார்த்து "**நான் இங்கிருக்கிறேன், நான் இங்கிருக் கிறேன்**" என்று அழைக்கிறார். ஆனால் மக்கள் கவனிக்காமல் தங்கள் சொந்த வழிகளில் செல்லுகிறார்கள். அவர்கள் அவரைக் காணவுமில்லை, அவருடைய சத்தத்தைக் கேட்கவுமில்லை. அவர்கள் அவருடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடவுமில்லை, ஆனால் அவர் அவர்களை அழைத்துக் கொண்டே யிருக்கிறார். மக்கள் வேடிக்கை, இன்பங்கள், பணம், உடைமைகள், பதவி, அதிகாரம் ஆகியவற்றை தேடுகி றார்கள். ஆனால் இவற்றையோ, இவற்றில் ஏதேனும் சிலவற்றையோ கண்டுபிடித்தாலும் அவர்கள் இருத யங்கள் வெறுமை யாகவே இருக் கின்றன. அவரை நாம் மறக்கும்போதும், கனவீனப்படுத்தும் போதும், துக்கப்ப டுத்தும் போதும் அவர் கண்ணீர் விடுகி றார்.

கண்ணீர் விடும் அளவுக்கு மக்கள் மீது உங்களுக்கு அன்பு இருக்கிறதா? உண்மையான கண்ணீர் உங்களிடத்தில் காணப்படுகிறதா? உங்கள் இருதயமானது இரட்சிக்கப்படாத ஆவிக்குரியபடி இழந்து போன மக்களுக்காக கதறலாமே.

உங்கள் இருதயம் கண்ணீர் வடிக்க இயேசு காத்து நிற்கிறார். **தேவனுடைய இருதய கண்ணீரை உணர்ந்து எந்தப் பட்டணத்திற்காகக் கண்ணீர்விடப் போகிறீர்கள்?** தேவையும், வேதனையும் நிறைந்த இழந்து போன மக்களுக்காக பாரத் தோடு ஜெபிக்கிறவர்கள் பாக்கிய வான்கள். ஒன்றிரண்டு பட்டணங்களுக் காகவேனும் தாகமுள்ள இருதயத் தோடு அவர்களின் இரட்சிப்புக்காக தேவனிடம் ஒவ்வொரு நாளும் கண்ணீர் விடுவீர்களானால் நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள்.

60 ஆண்டுகளுக்கு முன்னால் நான் வேதகலாசாலையில் பயின்ற போது மாலைதோறும் கண்ணீர்விட்டு அழுது ஜெபித்த ஒரு வாலிபரை நான் மறக்க முடியாது. அவன் ஜன்னல் வழியாக எங்கள் பட்டணத்தைப் பார்ப்பான். மறுபடியும் மறுபடியும் தனது அறையில் அழுது அப்பட்டணத் தின் தெருவிலும், வீடுகளிலும் பாவத் தோடு வாழும் மக்களுக்காக ஜெபிப் பான். அவன் அவர்களை நேசித்து அவர்கள் இரட்சிப்பை நாடி அவர்களுக் காக ஜெபித்தான்.

பிறருக்காக ஜெப பாரத்தை சுமப்பது என்றால் என்ன என்று தெரியுமா? அன்பின் வாஞ்சையால் அன்பானவர் களுக்காக கண்ணீர்விட்டு ஜெபிக்க அறிவீர்களா? ஏதேனும் ஒரு பட்டணத்தை எடுத்துக்கொண்டு அதற் காகக் கண்ணீர் விட்டு ஜெபியுங்கள் என்று உங்களை அன்புடன் கேட்கி றேன். மிஷன் களங்களில் சிலவற்றைக் கூட உங்கள் எண்ணத்தில் வைத்து ஜெபிக்கலாமே. அப்படிச் செய்தால் தேவனுடைய இருதயம் பூரிப்படை யும். பட்டணங்களையும் அவற்றில் வாழும் மக்களையும் உங்கள் அன்பின் இருதயத்தோடுகு வி ஜெபத்தின் மூலம் நேசிக்க தேவன் விரும்புகிறார்.

உங்கள் அன்பு உதவி செய்வதும், சுய தியாகமுள்ளதுமாய் இயேசுவின் அன்பைப் போலிருக்கட்டும்.

உங்கள் கண்களில் கண்ணீர் எங்கே?

பாவிகளின் கண்களில் கண்ணீர் இருக்கிறது,
பாவப் பழக்கங்கள் இதயம், கை, கால்களைக்
கட்டியிருப்பதால்
பாவத்தாலும், தோல்வியாலும் வெட்கத்தால் நொறுங்கி
கூடான கொதிக்கும் கண்ணீர்த்துளிகள்,
கூடான கன்னங்கள் வழியாக இறங்கி வருகின்றன
பாவிகளின் கண்களில் கண்ணீர்

பாடனுபவிக்கிறவர்களின் கண்களில் கண்ணீர்
இருக்கிறது
வியாதியாலும், பலவீனத்தாலும், வேதனை
யாலும் களைப்படைந்த நீண்ட மணிநேரங்கள்
மறுபடியும் ஆரோக்கியம் கிடைக்க ஜெபித்திட்பின்
குணமாகக் காத்திருந்தும் பயனில்லையே
பாடனுபவிக்கிறவர்களின் கண்களில் கண்ணீர்

அதைரியமடைந்தவர்களின் கண்களில்
கண்ணீர் இருக்கிறது
அவர்களை அறியவேண்டியவர்களாலும் தவறாக
எண்ணப்பட்டு
அன்புகூர யாருமின்றி, மனதிரங்க மக்களின்றி
அதைரியத்தால் மூர்ச்சையாகி, நம்பிக்கை
மங்கலாகிவிட்ட
தைரியமிழந்த மக்களின் கண்களில் கண்ணீர்

கிறிஸ்துவற்றவர்களின் கண்களில் கண்ணீர்
இருக்கிறது
மரத்தாலும், கல்லாலும் செய்த விக்கிரகங்களை
அழைத்தும்
அழைப்பில் பயனில்லை இரட்சகராகிய கிறிஸ்து
வை அறியவில்லை
ஆறுதலற்ற, உதவியற்ற தேவனற்ற தனியனான
கிறிஸ்தவனல்லாதவனின் கண்களில் கண்ணீர்

இரட்சகரின் கண்களில் கண்ணீர் இருக்கிறது
பாவம் செய்து அதைரியமும், நோயும் கொண்டதும்
தமது சித்தத்தை விட்டு விலகி அலைந்து வாழும்
இன்றும் நாம் சுவிசேஷம் அறிவிக்காத கோடிக்
கணக்கான மக்களுக்காக
இரட்சகரின் கண்களில் கண்ணீர்

ஆனால் உங்கள் கண்களில் கண்ணீர் எங்கே?
அழுது புலம்பும் கோடிக்கணக்கானோருடன்
அழ முடியாதா?
காணாமற்போன ஆடுகளுக்காக உங்களிடம்
கண்ணீர் இல்லையா?
இயேசு கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்
ஆ! உங்கள் கண்களில் கண்ணீர் எங்கே?

உங்கள் கவனத்திற்கு

மாதம் தோறும் அல்லது சிறப்பு காணிக்கை அனுப்புகிறவர்களுக்கு ஜனவரி மாதம் காலண்டர் அனுப்பி விட்டோம். யாருக்காவது வர தவறி யிருந்தால் தயவு செய்து, எங்களுக்கு மொபைல் மூலம் தெரியுங்கள், நான் உங்கள் சகோதரன்

Mobile: 95432 21008

Whatsapp: 94897 40295

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

உங்கள் எல்லா நடத்தைகளிலும் ஆண்டவரின் **அன்பு** உங்களில் இருக்கிறது என்று வெளிப்படட்டும். உங்கள் **அன்பு** உதவி செய்வதும், சுய தியாகமுள்ளதுமாய் இயேசுவின் அன்பைப் போலிருக்கட்டும்.

எப்படிப்பட்ட பாவம் நிறைந்த, தவறு செய்கின்ற மக்கள் என்றாலும் **அன்பா**யிருங்கள். அவர்களை நேசிப்பதின் மூலம் எல்லோரையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குடும்பம், சபை, உலகம் எல்லாவற்றிலும் "**அன்பே** பெரியது"

காயப்பட்ட யூதனை கண்டு தன் சகோதர உறவான ஆசாரியனும் லேவியனும் விலகிச் சென்றனர். ஆனால் யூதர்களால் வெறுக்கப்பட்டு பகைஞனாகக் கருதப்பட்ட சமாரியன் இரக்கம் கொண்டு, அவனிடத்தில் வந்து அவன் காயங்களைக் கட்டி தன் சொந்த மிருகத்தின் மேலேற்றி, சத்திரத்துக்குக் கொண்டு சென்றான். அவனை நன்கு பராமரித்த பின்பு சத்திரக்காரனிடம் தான் திரும்பி வரும் போது தேவையான பணத்தைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணி அவனது பாதுகாப்பினை உறுதி செய்து விட்டுச் செல்கிறான். ஒரு பகைவன்தான் இந்த உதவிதனைச் செய்தான். இதுவே **தேவ அன்பு**.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason